# ஆசியுரை

ஆண்டவர் இயேசு உயிர்த்தெழாவிட்டால் எமது விசுவாசம் வீண் என்று தூய பவுல் அடிகளார் சாட்சியம் சுறுகின்றார். எமது விசுவாசத்தின் அடிப்படை உயிர்த்தெழுதல் என்பதை நாம் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். உயிர்ப்பு என்பது புதுவாழ்வைக் குறிக்கும். இயற்கையிலேயே நாம் உயிர்ப்பைப் பார்க்கின்றோம். புதிய உயிர்கள் உருவாகின்றன. முட்டையில் இருந்து குஞ்சுகள் உருவாகின்றன, விதைகளிலிருந்து பயிர்கள் முளைத்தெழுகின்றன, மிருகங்களிலிருந்து புது உயிர்கள் உருவாகின்றன. ஆகவே முற்றுமுழுதான புதிய மாற்றம், புதிய வாழ்க்கை முறை என்பதை அறியக்கூடியதாயிருக்கின்றது. நாம் ஒவ்வொருவரும் இறைவனின் விருப்பப்படி இறை சாயலாகவும், பாவனையாகவுதம் படைக்கப்பட்டிருக்கிறோம் எல்லாம் ஒரு சங்கிலித் தொடராக இருந்தாலும் மனித மாற்றநகளில் உயிர்ப்பு, புதுவாழ்வு, புதிய மாற்றம் போன்றவை உருவாக வேண்டும். முட்டை வெடித்து உடைந்து புதிதாக உருவாகின்றது. விதைகள் சிதைந்து நிலைமாறி புதிய பயிர் உருவாகின்றது, குழந்தை பிறக்கம்போது பிரசவ வேதனை உருவாகி புதிய சந்ததி உருவாகின்றது. வேதனைகள், உடைவுகள், தியாகங்கள், துன்பங்கள், இல்லாமல் உயிர்ப்பு இல்லை. உயிர்ப்பை கண்டுகொள்ள வேண்டுமென்றால் தியாகங்கள், யாகங்கள், அர்பணிப்புக்கள், ஒறுத்தல்கள் செய்தே ஆகவேண்டும். புதிய வாழ்க்கை வாழ வேண்டுமென்றால் துன்பங்கள், துயரங்கள், வேதனைகளை அனுபவித்தே ஆக வேண்டும். உயிர்ப்பு வானத்திலிருந்து விழுவதில்லை, இலகுவாக கிடைத்துவிடுவதுமல்ல மாறாக எவ்வளவோ தியாகங்கள், அர்ப்பணிப்புக்கள். இழப்புக்கள், உயிர்த் தியாகங்கள் மத்தியில்தான் புதிய வாழ்வைப் பெற்றுக்கொள்ள முடியும், ஆண்டவர் இயேசு பெரிய தியாகங்களையும், அர்ப்பணிப்புக்களையும் உயர்ந்த நன்கொடைகளையும் எம்மிடமிருந்து எதிர்பார்க்கவில்லை என்பது நிற்சயம். "உங்களுடைய பலிகளையும், வழிபாடுகளையும் வெறுக்கின்றேன் இவை எனக்கு அருவருப்பாக இருக்கின்றன, மாறாக உடைந்துபோன உங்களுடைய உள்ளத்தையே எதிர்பார்க்கின்றேன்" என்ற மிகவும் அழகாக் சுறுகின்றார். அதாவது எமது அன்றாட வாழ்வில் சிறு சிறு தியாகங்களை, அர்ப்புணிப்பக்களை செய்கின்றபோது அதுவே மிகவும் பெரிதாக ஆண்டவர் இயேசுவின் சந்நிதானத்தில் கருதப்படுகின்றது. ஒருவரை ஒருவர் மன்னிக்கும் பொழுது, ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொள்ளும் பொழுது, ஒருவரை ஒருவர் மதிக்கும் பொழுது, ஒருவர் ஒருவருக்காக வாழும் பொழுது, ஒருவர் ஒருவருக்காக நேரத்தை, காலத்தை, உழைப்பை தியாகம் செய்யும் பொழுது இயேசுவிற்கு மிகப்பெரிய தியாகத்தை செய்கின்றீர்கள். இன்றைக்கு பணம், பதவி, பட்டம், அதிகாரம், ஆணவம், புகழ் போன்றவைதான் எமது வாழ்க்கையில் முன்னுக்கு நிற்கின்றது. மனித நேயம், மனித மாண்பு, மனித விழுமியங்கள் எல்லாம் தொலைந்து காணமலாக்கப்பட்டதாகவே இருக்கின்றது. சகோதரங்களை எங்களால் மன்னிக்க முடியுமா? எமது அந்தஸ்தை எம்மால் விட்டுக்கொடுக்க முடியுமா? நன்மைகளை செய்தல், மதித்தல் போன்றவை எமது உடலை பொது நன்மைக்காக பலி கொடுத்தலை விட மேன்மையானது என்பது ஆண்டவர் இயேசுவின் படிப்பினையிலிருந்து தெரிந்து கொள்கின்றோம். இம்முறை உயிர்ப்பு என்பது வெறுமனே வெளி ஆடம்பரங்களில் அல்ல உண்மையான உள மாற்றத்தில் உயிர்ப்பு இடம்பெற ஒருவர் ஒருவருக்காக செபிப்போம், யுத்தம் நீங்கி புதிய வாழ்வை வாழ மன்றாடுவோம்.

நன்றி